16th March 1960] [Sri M. C. Muthukumaraswamy]

விவசாயத்தைப் பெருக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் அதிகமாக உற்பத்தி செய்த விவசாயிகளுக்குப் பரிசுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இரண்டு நாட்களுக்கு முன்புதான் அந்தப் பரிசுகள் கொடுக்கப்பட்டன. பரிசுபெற்றவர்கள் வசதியுள்ள நிலச்சுவான்தார்களேதவிர, உழைக்கும் விவசாயிகள் அல்ல. வயல்களில் இறங்கி உழைத்தவர்களும் உரங்களை வயல்களில் போட்டவர்களும் விவசாயிகள்தான். எனவே தனவந்தர்களாக இருக்கும் மிராசுதார்களுக்கு தங்கத்தாலான பரிசுகளைக் கொடுத்தாலும், வயல்களில் கஷ்டப்பட்டு உற்பத்தியைப் பெருக்கிய விவசாயிகளுக்கு சாதாரண பித்தளை உலோகத்திலான பரிசுகளையாவது வழங்கினால் நன்றாக இருக்கும் என்று சொல்ல விரும்புகிறேன்.

பில்டர் பாயிண்ட் கிணறுகளைப்பற்றி சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். சென்ற வருஷம் என் வயலில் பில்டர் பாயிண்ட் முறையைக் கையாண்டேன். இந்த முறையில் 21 அடிக்கு மேலே தோண்ட முடியாது என்று சொல்லிவிட்டார்கள். தஞ்சாவூர் ஜில்லாவில் 28, 30 அடிகளுக்குள் தண்ணீர் வந்துவிடும். பில்டர் பாயிண்ட் கிணறு முறையை அவ்வளவு ஆழம் தோண்டக் கூடிய அளவுக்கு அபிவிருத்தி செய்தால், தஞ்சாவூர் ஜில்லாவில் அந்த முறை நல்ல பலன் அளிக்கும் என்று சொல்ல விரும்புகிறேன்.

இன்னொரு விஷயம் சொல்ல விரும்புகிறேன். மேட்டூர் அணை கட்டப்படுவதற்கு முன்பு தஞ்சாவூர் ஜில்லாவில் ஓடும் ஆற்றுத் தண்ணீரைக் கையில் எடுத்துப்பார்த்தால், அதில் தழை சத்துள்ள பொருள்கள் நிறைய இருக்கும். அந்தத் தண்ணீரை அப்படியே குடிக்கக்கூட முடியாது. ஆனால் மேட்டூர் அணை கட்டப்பட்ட பிறகு தண்ணீரில் அந்த மக்கிய எருப் பொருள்கள் வருவது நின்றுவிட்டது. இப்போது மேட்டூர் அணையில் சாதாரணமாக 46 அடிக்கு வண்டல் தேங்கியிருப்பதாக தெரிகிறது. அந்த வண்டலை குழப்பிவிட்டு வெளியேற்றினால் அதில் உள்ள வண்டல் முன்போல் தஞ்சாவூர் பகுதியில் வரும் தண்ணீரில் வரும். அதற்கான முறையில் வண்டலை குழப்பி தண்ணீருடன் கலக்கச் செய்வதற்கான வழியை நிபுணர்களைக் கொண்டு கண்டுபிடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனக்கு பேசுவதற்கு சந்தர்ப்பம் அளித்த தலைவர் அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

* Sri M. KARUNANITHI : மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, 1960-61-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின் பேரில் என் கருத்துக்களை எடுத்துரைக்க விரும்புகிறேன். இந்த அறிக்கையை பல ஆளும் கட்சி அங்கத்தினர்கள் ஆதரித்துப் பேசினார்கள். குறிப்பாக, தேனீ தொகுதி அங்கத்தினராகிய ஸ்ரீ தியாகராஜ நாயக்கர் இந்த அறிக்கை சர்க்கரைப் பொங்கலாகத் தித்திக்கிறது என்று குறிப்பிட்டார். நாங்களெல்லாம்

இந்த அறிக்கையைப் படித்துப்பார்த்தோமே தவிர தின்று பார்க்கவில்லை. (சிரிப்பு.) ஒருவேளை, அவருக்கு இது தித்திப்பாக இருக்கக்கூடும். மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் ஆண்டுதோறும் நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பிக்கும்போது, 'இந்த அறிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சபையைக் கேட்டுக் கொள்கிறேன்' என்று வழக்கமாக முடிப்பார். ஆனால் இந்த ஆண்டு அவர் இந்த அறிக்கையை முடிக்கும்போது 'இந்த அறிக்கையை சபை ஏற்றுக்கொள்ளும் என்ற முழு நம்பிக்கையோடு முடிக்கிறேன்' என்று குறிப்பிட்டிருக்கிறார். கனம் அமைச்சர் எந்த ஆண்டிலும் இல்லாமல் இந்த ஆண்டு இந்த நம்பிக்கையைப் பெற்றதற்குக் காரணம் என்ன என்று நான் எண்ணிப்பார்க்கும் போது, இந்த வருஷம் புது வரி எதுவும் இல்லை என்பதாலும், அழுகும் பொருள்களின் மீது ஏற்கனவே விதிக்கப்பட்டிருந்த வரி இப்போது நீக்கப்படுகிறது என்பதாலும் இந்த அறிக்கை மக்கள் மன்றத்தின் நம்பிக்கையைப் பெற்றுவிடும் என்று அவர் கருதியிருப்பார் என்று நான் நினைக்கிறேன். புது வரிகள் போடாமல் இருப்பதுடன் இருக்கும் வரியையும் நீக்குவதாகக் கூறுவதற்குக் காரணம் என்ன என்று சிந்திக்கும்போது ஒன்று தெரிவிக்க விரும்புகிறேன். ஒட்டகத்தின் மீது நிறையப் பாரத்தை ஏற்றி விட்டு அதற்கு மேல் இரண்டு கற்களையும் வைத்துவிட்டு, எடுப்பதற்காகவே வைத்திருந்த கற்களை சிறிது நேரத்திற்குப் பிறகு எடுத்துவிடும்போது ஒட்டகம் எழுந்து நடக்கும் என்று சொல்லக் கேட்டிருக்கிறோம். அதேபோல மதிப்பிற்குரிய நிதி அமைச்சர், மக்கள் மன்றத்தையும் ஒட்டகத்தைப்போல எண்ணிக்கொண்டு வரிப் பளுவை அதிகமாக அவர்கள் மீது சுமத்திவிட்டு பிறகு ஏதோ இரண்டு மூன்று வரிகளை எடுத்துவிட்டதாகக் கூறுகிற காரணத்தினால் மக்கள் நிம்மதி அடைந்துவிடுவார்கள் என்று எதிர்பார்ப்பாரானால் அது மிகவும் வருந்தத்தக்கது என்று குறிப்பிட விரும்புகிறேன்.

மேலும் நமது நிதி அமைச்சர் சமர்ப்பிக்கும் எல்லா நிதி நிலை அறிக்கைகளிலும் வழக்கமாக விலைவாசி என்ற பகுதி முதலில் இடம் பெறும். இந்த வருஷ நிதி நிலை அறிக்கையில், மதிப்பிற்குரிய நிதி அமைச்சர் விலைவாசியைப் பற்றி முதலிலேயே கூறாமல், இந்த அரசாங்கத்தால் செய்யப்படும் அரிய பெரிய காரியங்கள் அத்தனையையும் 36 பக்கங்கள் வரையில் எடுத்துரைத்துவிட்டு கடைசியில் அந்த சோகக் கதையை "க்ளைமாக்ஸ்" கட்டத்தில், விலைவாசி, சம்பள உயர்வு இவைகள் ஒரு சுழல் போல இருக்கின்றன என்று கூறியிருக்கிறார். இதுவரையில் முன்னால் சொல்லப்பட்டுவந்த விலைவாசிச் சங்கடம் இந்தத் தடவை ஏன் பின்னுக்குத் தள்ளப்பட்டிருக்கிறது? விலைவாசிச் சங்கடத்தைப் பற்றி இந்த ஆண்டுமட்டும்தான் இத்தகைய குரல் எழுப்பியிருக்கிறார்களா? அல்லது ஆண்டு தோறும் இந்தக் குரல் இந்த மன்றத்தில் எழுப்பப் படுகிறதா என்று எண்ணிப்பார்க்க வேண்டும். 1957-58-ம் வருஷ நிதி நிலை அறிக்கையை சமர்ப்பித்த இதே நிதி அமைச்சர் கனம் ஸ்ரீ சுப்ரமணிய கௌண்டர் அவர்கள் அந்த அறிக்கையில்

16th March 1960] [Sri M. Karunanithi]

"விளைச்சல் பெருகியதின் காரணமாக விலைவாசிகள் குறைந்திருக்க வேண்டும். ஆனால், இந்த ஆண்டில், விலை அதிகமாக உயர்ந்துள்ளது. . . . உணவுப் பற்றாக்குறை இல்லாத காலத்தில், வேளாண்மையே முக்கிய தொழிலாகவுள்ள ராஜ்யத்தில், விவசாய விளைபொருள்களின் விலை உயர்வு பொதுவாக வரவேற்கத் தக்கதாகக்கூட இருக்கலாம். ஆனால் நாட்டில் பற்றாக்குறையின் காரணமாக, உணவுப் பொருள்களின் விலை உயர்ந்தால் அது மிகவும் அபாயகரமானது. நாடு முழுவதையும் எடுத்துக்கொண்டு பார்க்கும்பொழுது அரிசிப் பற்றாக்குறை ஓரளவு உயர்ந்துள்ளது என்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும். வெளிநாடுகளிலிருந்து அரிசி இறக்குமதி செய்வதும் நாளுக்குநாள் கஷ்டமாகிக்கொண்டு வருகின்றது. இந்நிலையில் உணவு நிலைமையை அரசாங்கம் விழிப்புடன் கவனித்துவருகிறது" என்று குறிப்பிட்டிருக்கிறார். 1958-59-ம் வருஷ நிதி நிலை அறிக்கையில் " . . . நல்ல அறுவடையின் பயனாக விலைவாசிகள் இப்பொழுது ஸ்திரமாகி வருகின்றன. இருந்த போதிலும் நாம் இன்னும் நிலைமையை விழிப்புடன் கவனிக்க வேண்டிய அவசியம் இருந்து வருகிறது" என்று குறிப்பிட்டார்கள். 1959-60-ம் வருஷத்திய அறிக்கையில் " . . . விலைவாசிகளின் உயர்வு இன்னும் பெரும் பிரச்னையாக வேயிருந்து வருகிறது. அதிலும் முக்கியமாக உணவுப் பொருள்களின் விலையேற்றம் கவலைக்கிடந்தரக்கூடியதாக உள்ளது. தானிய மொத்த விலைக் குறி எண், 1957 டிசம்பரில் 512-ல் இருந்தது. 1958 டிசம்பரில் 569 அளவுக்கு உயர்ந்தது . . . இதைப் பரிசீலனை செய்த தேசிய அபிவிருத்திக் குழு, உணவு தானியங்களின் விலையைக் கட்டுப்படுத்த வேண்டுமாயின் தானிய மொத்த வியாபாரம் அனைத்தையும் சர்க்காரே எடுத்துக் கொண்டு நடத்துவது தான் வழியென்ற முடிவிற்கு வந்திருக்கிறது . . ." என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையிலும் " . . . விலைவாசிகளை ஓரளவுக்குக் கட்டுப்படுத்துவதற்கான வழிவகைகளை வகுக்க வேண்டியது மிகவும் அவசியம் என்பதை மறுமுறையும் இங்கு வலியுறுத்த விரும்புகிறேன்" என்று கூறியிருக்கிறார். 12-00 noon.

விலைவாசி உயர்வைப்பற்றி ஆண்டுதோறும் பாடிய பல்லவியே மீண்டும் மீண்டும் பாடப்பட்டிருக்கிறது. ஆண்டுதோறும் இதே பல்லவியைப் பாட, விலைவாசி உயர்ந்து கொண்டே போவது சங்கடமாகத்தான் இருக்கிறது என்பதைச் சொல்லி விட்டிலே இருக்கக்கூடிய பாட்டியே போதும்: அதற்கு ஒரு பாராளுமன்ற அமைச்சர் தேவையில்லை என்று மிகமிக வருத்தத்துடன் குறிப்பிட விரும்புகிறேன். கரும்பு சாகுபடி, எண்ணெய் வித்துக்கள், முந்திரி, தேங்காய், விவசாய வளர்ச்சி, மண் வளப் பாதுகாப்பு, நீர்ப்பாசன வசதிகள், சமுதாய நலத் திட்டங்கள் என்று வரிசையாகத் தாங்கள் செய்திருக்கக்கூடிய காரியங்களைச் சொல்லி விட்டு, இவ்வளவுக்கும் பிறகு "விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த வேண்டியது அவசியம் என்பதை வலியுறுத்துகிறேன்" என்று கூறுகிறார். இது எப்படி இருக்கிறது என்றால்

[Sri M. Karunanithi] [16th March 1960

8 டாக்டர்கள் பார்த்து 7 லட்சம் ரூபாய் செலவாகியும் நோய் இன்னதென்று கண்டு பிடிக்க முடியவில்லை; ஆகவே ஆள் காலி" என்பதைப்போல் இருக்கிறது. பார்த்தவர்கள் டாக்டர்களா என்று சந்தேகம் மக்களுக்கு ஏற்படுகிறது. விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று 5, 6 வருஷ காலமாக அமைச்சர்களும் மக்களோடு சேர்ந்து பேசிவருகிறார்கள். மக்கள் பிரதிநிதிகளைப் பார்த்து விலைவாசி குறைய வழியில்லையா என்று கேட்கிறார்கள். மக்கள் பிரதிநிதிகள் அமைச்சர்களைப் பார்த்து விலைவாசி கட்டுப்படுத்தப்படுமா என்றும் அமைச்சர்கள் மக்கள் பிரதிநிதிகளைப் பார்த்து விலைவாசி கட்டுப்படுத்தப்படுமா என்றும் கேட்பதே ஒரு பெரிய சுழலாக இருக்கிறதே தவிர, விலைவாசியும், ஊதிய உயர்வும் பெரிய சுழலாக இல்லையென்று குறிப்பிட விரும்புகிறேன். மத்திய சர்க்கார் பொருள் துறை வேலையோடு பிணைக்கப் பட்டிருப்பது இந்த விலைவாசியைக் கட்டுப்படுத்த முடியாத காரணங்களில் ஒன்றாகக் காட்டப்படுகிறது. அப்படியானால் மத்திய சர்க்கார் பொருள் துறை பிணைப்பிலிருந்து இந்த மாகாணம் விலகிக் கொள்ளுமானால், இந்த மாகாணம் விடுதலை பெறுமானால், நிச்சயமாக விலைவாசிகளைக் கட்டுப்படுத்த முடியும் என்பதை அமைச்சரவை சிந்தித்துப் பார்க்க வேண்டும். அமைச்சர் அவர்கள் பக்கத்துக்குப் பக்கம் புள்ளி விவரங்களைக் கடுகு தாளிப்பதைப்போல் கொட்டி ஏட்டை நிரப்பி விடுவதால் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்ளுகிறார்கள். அவ்வாறு காட்டப்படுகிற புள்ளி விவரங்களை தாங்கள் நம்ப வேண்டுமென்று சொல்லுகிறார்கள். உள்ளபடியே அந்தப் புள்ளி விவரங்கள் ஆதார பூர்வமானவையா? நம்பிக்கைக்கு உரியனவா? உதாரணத்திற்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். அதிர்ச்சி தரக்கூடிய முரண்பாடு என்று சொல்ல மாட்டேன். 1959-60-ம் ஆண்டு அறிக்கையில் 1956-57-ம் ஆண்டு 2·6 லட்சம் டன் உரம் வழங்கப்பட்டது என்று கூறப்பட்டிருக்கிறது. இப்போது சமர்ப்பித்த அறிக்கையில் 1956-57-ம் ஆண்டில் 2·53 லட்சம் டன் வழங்கப்பட்டது என்று சொல்லப் பட்டிருக்கிறது. இந்த முரண்பாடு சாதாரணமானதுதான். ஆனால் இது புள்ளி விவரம் என்ற மயக்கத்திரையைக் கிழிக்கப் பயன்படுகிறதல்லவா? புள்ளி விவரங்களை வைத்துக்கொண்டு இந்த நாட்டு மக்களை ஏமாற்ற, இந்த நாட்டு மக்களுடைய கண்களை மூட, முயற்சி செய்கிறது என்று நான் இந்த அமைச்சரவையைக் குற்றம் சாட்டுகிறேன். கோழிப் பண்ணைகளில் உள்ள கோழிகள் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் எத்தனை என்று கேட்டால், மந்திரி மாவட்ட அதிகாரியைக் கேட்கிறார். மாவட்ட அதிகாரி கிராம அதிகாரியைக் கேட்கிறார். கிராம அதிகாரி தலையாரியைக் கேட்கிறார். தலையாரி இந்த ஊரிலே 15 கோழிகள் இருக்கின்றன என்று சொன்னால் அந்தப் புள்ளிவிவரம் மந்திரி கையில் வந்து சேருவதற்குள் 4 கோழிகள் பிரியாணியாகக் கொதித்துக் கொண்டிருக்கிறது. இப்படிப்பட்ட புள்ளிவிவரங்களை, கவைக்கு உதவாத புள்ளி விவரங்களை. வைத்துக்கொண்டு தயாரிக்கப்பட்ட இந்த பட்ஜெட்டை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று சொன்னால் யாரும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

உணவு உற்பத்தியை பெருக்க சரியாக திட்டம் இல்லை. உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு பல சிறிய பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றப் பணம் இல்லை. பணம் கேட்டால் வடக்கத்திச் சர்க்காருக்குக் கொடுக்க மனம் இல்லை. இப்போது பரம்பிக்குளத் திட்டம் குழம்பிக் கொண்டிருக்கிறது. இன்னும் நீங்கள் சொல்லுகிற கட்டளைக் கால்வாய், புல்லம்பாடிக் கால்வாய், மேட்டூர் கால்வாய் இவைகளைப் பற்றிய 1924-ம் ஆண்டு ஒப்பந்தத்தை சென்னை சர்க்கார் மீறிவிட்டது என்று மைசூர் சர்க்கார் குற்றம் சாட்டுகிற முறையில், மத்திய சர்க்கார் அதை ஏற்று எப்படித் தீர்ப்புக் கூறப் போகிறதோ என்ற நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் சிறிய சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் எவ்வளவோ நிறைவேற்றப்பட வேண்டியிருக்கின்றன. ஒவ்வொரு ஆண்டும் பேசுகிற நேரத்தில் அவைகளைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன். அவ்வாறு பேசுகிற நேரத்திலே, கனம் கக்கன் அவர்கள்கூட "நாங்கள் சொல்ல ஒரு திட்டம்கூட பாக்கி இல்லாமல் நீங்களே எல்லாத் திட்டங்களையும் கூறி விடுகிறீர்களே" என்று வேடிக்கையாகச் சொன்னார்கள். அவ்வளவையும் விட்டுவிடுங்கள். என்னுடைய தொகுதியில் நிறைவேற்றப்பட்ட வேண்டிய குடகனாறு திட்டத்தைப்பற்றி இந்த அவையிலே பேச ஆரம்பித்தநாள்முதல் கூறிக்கொண்டு வருகிறேன். திண்டுக்கல் வட்டத்திலே, வேடசந்தூர் அருகில் கல்வார்பட்டியில் குடகனாற்றில் ஒரு அணை கட்டி 20 மைல் நீளத்திற்கு வாய்க்கால் வெட்டினால் ஐந்தாறு ஏரிகள் நிரம்பும். பத்தாயிரம் ஏக்கர் நிலங்களைச் சாகுபடி செய்ய முடியும். இதுபற்றிப் பல முறை பேசியிருக்கிறேன். மந்திரி அவர்களிடத்திலும் தனியாகச் சந்தித்து எடுத்துக் கூறியிருக்கிறேன். ஆனால் அந்தத் திட்டத்தை நிறைவேற்ற என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? ஒரு மந்திரி என்னுடைய தொகுதியில் சுற்றுப்பிரயாணம் செய்யும் நேரத்தில் "நீங்கள் கருணாநிதிக்கு வோட்டுப் போட்டீர்களே அவன் உங்களுக்குக் குடகனாறு திட்டத்தை நிறைவேற்றித் தருவானா?" என்ற வகையில் பேசுகிறார். இதற்குப் பெயர் ஜனநாயகமா? அல்லது கடைந்தெடுத்த சர்வாதிகாரமா? என்று கேட்க விரும்புகிறேன். அமைச்சர்கள் தொகுதி மக்களைப் பார்த்து "நீங்கள் கருணாநிதிக்கு வோட்டுப் போட்ட காரணத்தினால் உங்களுக்கு குடகனாறு திட்டம் கிடையாது" என்று பயமுறுத்துவது அடுத்த தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு வோட்டுப் போடாதீர்கள் என்று அச்சுறுத்துவது போலாகும். இதை நான் குற்றம் சாட்டிக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அடுத்த ஆண்டுக்குள்ளாக அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று சொல்லட்டும். நாளையே அதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படும் என்று உத்தரவு பிறப்பித்தால், நான் இன்று மாலையே என்னுடைய பதவியை ராஜினாமா செய்யத் தயாராக இருக்கிறேன்.

**THE HON. SRI C. SUBRAMANIAM :** குடகனறு திட்டத்தை நிறைவேற்ற வேண்டாமென்று மராமத்து மந்திரி அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன். ஏனென்றால் கருணாநிதி அவர்கள் இந்தச் சபையிலே இருக்கவேண்டும்.

**SRI M. KARUNANITHI :** ஒரு பொறுப்புள்ள அமைச்சர் ஒரு திட்டம் பற்றி பேசுகிற நோக்கில் "கருணாநிதிக்கு வோட்டுப் போட்டாயே, அதனால் அந்தத் திட்டம் கிடையாது" என்று பேசுவது அவருடைய பொறுப்புணர்ச்சியைக் காட்டுகிறதா என்பதை எடுத்துக் காட்டத்தான் இதைக் கூறினேனே தவிர நிதியமைச்சர் அவர்களின் கேலிக்காகவோ கிண்டலுக்காகவோ குறிப்பிடவில்லை. கருணாநிதி விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் பொதுமக்கள் தேர்தெடுத்தால் இங்கு வருவான். "அண்ணாதுரை 2,000 கோடி ரூபாய் திட்டம் கொடுத்தால் நான் ராஜிநாமா செய்து விடுகிறேன்" என்று நிதியமைச்சர் பேசினார். அண்ணா அவர்கள் திட்டம் கொடுத்தால் உங்களுடைய பதவி போய்விடுமே என்ற காரணத்தால் நாங்கள் கொடுக்கவில்லை என்று நாங்கள் அப்போது கூறியதையே நீங்கள் இப்போது திருப்பிக்கூறவேண்டிய அவசியம் இல்லை.

சமுதாய நலத் திட்டங்களைப் பற்றிப் பெருமையாகப் பேசப் படுகிறது. இந்த மன்றத்தில் பலர் அதைப் பற்றிப் பேசினார்கள். சமுதாய நலத் திட்டங்கள் அரசியல் விளம்பரத்திற்கு, ஒரு கட்சி யின் விளம்பரத்திற்காக, ஏற்படுத்தப்பட்ட திட்டங்களா? அல்லது பொதுமக்களுக்கு நன்மை பயக்கக் கூடிய திட்டங்களா? இதற்கு ஒரே ஒரு உதாரணம் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய பிறந்த ஊரான திருக்குவளை கிராமத்தில் என் தாய் தந்தை பெய ரால் முத்துவேலர்-அஞ்சுகம் தாய் சேய் நல விடுதி கட்ட அறிஞர் அண்ணா அவர்களால் கல்நாட்டு விழா செய்யப்பட்டது. அதற்காக சுமார் 7,000 ரூபாய் செலவழிக்கத் திட்டமிட்டு, சமீபத்தில் 5,000 ரூபாய் பணத்தையும் அனுப்பி வைத்தேன். அதுபற்றி அங்குள்ள தோழர்கள் எனக்கு அனுப்பியிருக்கும் கடிதத்தைப் படித்து விட்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர் எழுதியிருக்கிறார்—

"நமது திருக்குவளை முத்துவேலர்—அஞ்சுகம் மருத்துவ மனையின் கல்நாட்டு விழா 22—5—59-ம் நாளில் நடைபெற்றது. அதற்கு பிறகு தஞ்சை டிஸ்ரிக்ட் ஹெல்த் ஆபீசர் அவர்கள் தங்களிடம் திருக்குவளை கட்டிட Plan and Estimate கேட்டு கடிதம் எழுதியிருந்தார். அதைத் தாங்கள் எனக்கு அனுப்பி இருந்தீர்கள். அதற்குப் பிறகு நாகை வட்டார அபிவிருத்தி அதிகாரிகள் துணையுடன் குடந்தையில் இருக்கும் Retired சந்திரசேகர அய்யர் அவர்களிடம் Plan and Estimate தயாரித்து தங்கள் சார்பாக D.H.O வுக்கு அனுப்பி யிருந்தேன். அது அனுப்பப்பட்ட தேதி மேலவாழக்கரை அஞ்சல் அலுவலகத்தில் 14—12—59-ல் 182-ம் நம்பரில் ரிஜிஸ்டர் செய்துள்ளேன். அதற்குப் பிறகு டிசம்பர் கடைசி வாரத்தில்

16th March 1960] [Sri M. Karunanithi]

நாம் அனுப்பியிருந்த Plan and Estimate— ஐ எடுத்துக் கொண்டு நாகை Health Inspector இடத்தைப் பார்வையிட வந்தார். வந்து பார்வையிட்டுவிட்டு, ஒரு கக்கூசும், காம்பவுண்டு சுவரும் சேர்க்கவேண்டுமென்று என்னிடமிருந்து தங்கள் சார்பாக இசைவுக் கடிதம் பெற்றுக் கொண்டார். இன்னும் ஒரு வாரத்தில் D. H. O. Office ல் இருந்து Plan Approval ஆகி வந்து விடும். அதற்கு முன்எச்சரிக்கையாக கல், சிமெண்ட், முதலான தளவாட சாமான்களைத் தயார் செய்து வைத்துக்கொள்ளுமாறு கூறிச் சென்றார். உடனே, நான் கட்டிடத்திற்கு வேண்டிய கற்கள் முழுவதையும் கட்டவேண்டிய இடத்தில் சுமார் 40,000 கற்களும், கான்கிரீட் போடுவதற்கு 100 வண்டி சல்லிகளும், மணல் 50 வண்டியும், 65 மூட்டை சிமெண்டும் சேகரித்து வைத்திருக்கிறோம். அவர் சொல்லி விட்டுச் சென்ற நாளில் இருந்து எவ்விதப் பதிலும் வரவில்லை. அதன் பிறகு தஞ்சை D.H.O. — வுக்கு 15—1—60-ல் 188 நம்பரில் ரிஜிஸ்டர் செய்து ஒரு ரிமைண்டர் எழுதியிருந்தேன். அதற்கும் எவ்விதப் பதிலும் இல்லை.

(Deputy Speaker in the Chair.)

நாகை சென்று Health Inspector அவர்களை சந்தித்துக் கேட்டதற்கு நாம் அனுப்பிய Plan and Estimate சரியில்லை என்றும், சென்னையில் உள்ள Director of Public Health மூலமாக Sanitary Chief Engineer அவர்களிடம் சுமார் 8,000 ரூபாய்க்கு Plan and Estimate தயாரிக்க D.H.O. ஏற்பாடு செய்திருப்பதாகச் சொன்னார். இம்மாதிரியான வழக்கம் இந்த மாவட்டத்திலேயே இதுவரையில் நடந்ததில்லை. நான் டிஸ்ட்ரிக்ட் ஹெல்த் ஆபீஸர் அவர்களுக்கு பிப்ரவரி முதல் வாரத்தில்" .........

SRI J. MATHA GOWDER : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, ஒழுங்குப் பிரச்னை ஒன்று எழுப்ப விரும்புகிறேன். தனிப்பட்ட ஒருவர் எழுதிய கடிதத்தை இந்த மன்றத்தில் கனம் அங்கத்தினர் ஒருவர் வாசிக்கலாமா, அது சபையின் ஒழுங்குக்குக் கட்டுப்பட்டதாகுமா என்று தங்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

DEPUTY SPEAKER : May I know what the hon. Member is reading?

THE HON. SRI C. SUBRAMANIAM : யாரோ நண்பர் ஒருவர் எழுதிய கடிதத்தை வாசிக்கின்றார்.

DEPUTY SPEAKER : How can the hon. Member read that letter here?

SRI M. KARUNANITHI : வாசிக்கக் கூடாது என்றால் நான் வாசிக்கவில்லை. கடிதம் எனக்கு ஞாபகம் இருக்கிறது. 100 வண்டி சல்லிகளும், 50 வண்டி மணலும், 65 மூட்டை சிமெண்டும் சேகரித்து வைக்கப்பட்டிருக்கின்றன. சிமெண்டு கட்டிப் பிடித்துக்கொண்டிருக்கிறது. சாமான்கள் வந்து ஏழெட்டு மாதங்கள் ஆகின்றன. மணல் கரைந்துகொண்டிருக்கிறது. என்ன

செய்வது என்று கேட்டு எழுதியிருக்கிறார். அண்ணாதுரை திறந்து வைத்தார். கருணாநிதி கட்டிக்கொடுக்க இருக்கிறார்; அந்தத் தொகுதியில் காங்கிரஸ்காரர் வெற்றி பெற்றிருக்கிறார்; ஒருவேளை கருணாநிதிக்குப் பெயர் வந்துவிடுமோ என்ற காரணத்தினால்தான் தடைப்படுத்தப்படுகிறது, வேறு காரணம் என்ன இருக்கமுடியும் என்று கேட்டுக்கொண்டு . . .

DEPUTY SPEAKER : The hon. Member's time is up. He has already exceeded the time limit. So, he must finish his speech soon.

SRI M. KARUNANITHI : சமுதாய நலத் திட்டம் வெறும் அரசியல் விளம்பரச் சாவடிகள் என்று சொல்லி பட்ஜெட்டானது சர்க்கரை பொங்கல் அல்ல, முழுக்க முழுக்கக் கசப்பானதா என்று கேட்டீர்களேயானால்—கசப்பு என்றால் மருந்து என்று சொல்ல முடியாதே, அதனால் இதுவெரும் மாய்மாலம் என்று சொல்லிக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

* SRI P. ARASAN : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, சட்டசபை அங்கத்தினராக வந்தபிறகு இந்தத் தடவைதான் பேச எனக்கு வாய்ப்பு கிடைத்திருக்கிறது. அதற்காக தலைவர் அவர்களுக்கு என் நன்றி. நிதி அமைச்சர் அவர்கள் 1960-61-வது ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையை சபைமுன் சமர்பித்திருக்கிறார். அதற்காக வேண்டி அவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நாட்டுக்கு விவசாயம் முக்கியமானது என்பதைக் கருத்திற் கொண்டு நிதி அமைச்சர் அவர்கள் அதற்கென நிதி ஒதுக்கி, உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டுமென்று அவர்கள் மிகவும் வன்மையாகத் தெரிவித்திருக்கிறார். கடன் கொடுத்து உணவு உற்பத்தியை அதிகப்படுத்தி இருக்கிறார்கள். அதற்காக வேண்டியும் அவருக்கு என்னுடைய நன்றி. பின் தங்கிய ஏழை விவசாயிகள்தான் அதிகப்படியாக உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கும், காரணம் அவர்கள் வாழ்க்கையில் முன்னேறுவதற்கு, தேவையான நிதி ஒதுக்கவேண்டுமென்றும் குறிப்பிட்டிருக்கிறார். அதற்காகவும் அவருக்கு நன்றி.

சிதம்பரம் தாலுகாவிலுள்ள ஏழை விவசாயிகள் சாகுபடி செய்யும் நிலங்களிலிருந்து அப்புறப்படுத்தப்படுகிறார்கள். இரண்டு, மூன்று வருஷங்களாக சட்டம் அமுலுக்கு வந்திருந்தும், சுமார் 75 சத விகித விவசாயிகள் நிலத்தைவிட்டு வெளியேற்றப் பட்டிருக்கிறார்கள். இன்னும் வெளியேற்றிக்கொண்டே வருகிறார்கள். விவசாயிகள் சமரசக் கோர்ட்டில் மனுப்போட்டும், மிராசுதார்கள் பல சாட்சிகளுக்குப் பணம் கொடுத்து, வக்கீல்களைக் கொண்டு வாதாடி விவசாயிகளை நிலத்தில் சாகுபடி செய்ய விடாமல் முயற்சி செய்கிறார்கள். பலவிதமான பொய் சாட்சிகளைக் கொண்டுபோய் நிறுத்தி விவசாயிகளை வெளியேற்றுகிறார்கள். விவசாயிகள் கோர்ட்டில் அப்பீல் செய்துகொள்வதற்குப் பண வசதி இல்லாததால் அவர்கள் வெளியேற்றப்பட்டுக்கொண்டி-